**தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2019**

தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2767 எஸ்ஆர்ஜ இலக்க 2011 திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையின் உறுப்புரை II இன் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளது. அண்ணளவாக 62 கிலோ மீற்றர் தேசிய பெருந்தெருக்களை தரமுயர்த்துதல், புனரமைத்தல் மற்றும் மீள ஒருங்கிணைத்தல் மூலம் தேசிய போக்குவரத்தின் செயற்திறனை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,728 மில்லியனுக்குச் சமனான யு.எஸ்.டொலர் 105.60 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 11,050 மில்லியனுக்குச் சமனான யூ.எஸ்.டொலர் 85 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா. 2,678 மில்லியனுக்குச் சமனான யூ.எஸ்.டொலர் 20.6 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2767–எஸ்ஆர்ஜ இலக்க 2011 திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 2017 செப்தம்பர் 11 இல் பூர்த்தி செய்யப்பட்ட தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்திட்டம் என அழைக்கப்படும் ஏனைய செயற்திட்டங்களுக்கான மேலதிக நிதிகளை வழங்குவதற்காக இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2011 திசெம்பர் 14 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டு 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 வரை கூட அதன் நடவடிக்கைகளை முடிவுறுத்தாமல் தொடர்ந்து செயற்படுகின்றது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் முடிவுறுத்தப்பட்ட போதிலும், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 வரை கூட அதன் செயற்பாடுகளை முடிவுறுத்தியிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை குறைப்பதற்கு கடன் உடன்படிக்கையினால் முன்வைக்கப்பட்ட வரையறைகளை கருத்தில் கொள்ளாது தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் தயாரித்திருந்தது. | கணக்கீட்டு கொள்கைகள் பிழையான முறையில் பிரயோகிக்கப்பட்டது. | செயற்திட்டத்தினை மூடுவதற்கான தீர்மானம் தீர்க்கப்படாத காணி சுவீகரிப்பு கொடுப்பனவுகளின் காரணமாக இன்னும் முடிவு பெறாமல் காணப்படுகின்றது அனைத்து வீதிகளின் பகுதிகளின் அனைத்து ஒப்பந்த கடமைகளும் பூர்த்தியான பின்னர் ஆர்டிஏ விற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் உடனடியாக அமுல்படுத்தல் முகவரிற்கு மாற்றப்பட வேண்டியதுடன் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களும் தயரிக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டத்தின் பிரகாரம், ஹிக்கடுவ தொடக்கம் அலுத்கம வரையான தெற்கு அதிவேகப்பாதையுடன் நேரடியாக தொடர்புபட்ட 02 தேசிய வீதிகளின் 62 கி.மீகளின் வளப்படுத்தல் மற்றும் மறுசீரமைத்தல் மற்றும் மாத்தறை – கொடகம வீதி, கட்டுகுறுந்த – நாகொட வீதி, நுகேகொட – ஹோமாகம வீதி மற்றும் பாமன்கட – கெஸ்பவே வீதி போன்ற ஏனைய 04 தேசிய வீதிகளும் மேம்படுத்த பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், அவ் வீதிகளின் 55.72 கி.மீகளின் புனரமைப்பு வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மாத்தர – கொடகம வீதியின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மான வேலைகள் இலக்கிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த அதேவேளை ஏனைய விதிகளின் ஒப்பந்ததாரர்களிற்கு தளத்தினை கையளிப்பதற்கு நேரம் எடுத்தமை, அதன் மீதான அறிக்கைகளின் மதிப்பீடு மற்றும் வழங்களினை செய்வதில் தாமதம் மற்றும் பொதுச்சேவைகளை அப்புறப்படுத்தல் மற்றும் வேலைப்பரப்பு மாற்றங்களில் தாமதம் மற்றும் பல போன்ற பல்வெறு காரணங்களினால், 172 நாட்கள் தொடக்கம் 338 நாட்கள் வரையான வீச்சிலான தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அதன் பெறுபேறாக 03 ஒப்பந்தங்களிடமிருந்து கழிக்கப்பட்ட மொத்தமாக ரூபா 128 மில்லியன் தாமதக்கட்டணங்கள் அதன் மீது கால நீடிப்பினை வழங்குவதனூடாக மீளளிக்கப்பட்டிருந்தது.

### 3.2 புறநடையான கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது தென்மாகாணத்திலுள்ள காலி – பத்தேகம வீதியின் 17.60 கிமீ இன் புனரமைப்பிற்கான காணிகள் கொள்வனவிற்கு மொத்தமாக ரூபா 18.33 மில்லியன் செலவிட்டிருந்த போதிலும், வீதியின் உரிய பகுதியின் புனர்நிர்மான வேலைகள் அதன்மீதான நிதி ஏற்பாடுகளில் குறை காரணமாக செயற்படாமல் காணப்பட்டது. | செயற்திட்டததினால் செய்யப்பட்ட செலவுகள் ஏனைய நோக்கங்களை எதிர்கொள்ள பயன்படுத்தப்பட்டது. | காலி – பத்தேகம வீதியானது எஸ்ஆர்சீபி இன் கீழான உண்மை நிர்மான திட்டத்திலுள்ளது. உடன்படிக்கைகள் கையொப்பமிடப்படும் வரை, காணி சுவீகரிப்பு செயன்முறை என்எச்எஸ்பீ இன் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவ்வீதி வீதி அபிவிருத்தி மாஸ்டர் திட்டத்திலுள்ள முன்னுரிமை வீதியாகும். நிதிகள் வரையறை காரணமாக, இவ்வீதியின் நிர்மானம் இன்னும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் வேலைப்பரப்பினை கடைப்பிடித்தல் வேண்டும். |

### 3.3 காணி சுவீகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம, 1,362 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 7,702 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. எனவே, 4,427 காணித்துண்டுகளிற்கான ரூபா 5,870 மில்லியன் தொகையான இழப்பீடு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மொத்தமாக ரூபா 109.76 மில்லியன் 2019 திசெம்பர் 31 வரை 2,460 காணித்துண்டுகளின் இழப்பீடுகளை கொடுப்பதன் தாமதத்தின் மீதான வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 1986 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்கள் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட எந்த காணித்துண்டுகளினதும் கொள்வனவு செயன்முறையை பூர்த்திசெய்திருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு விடயங்கள் மீது பிணக்குகளிற்கு சாத்தியமானதுடன் மேலதிக கிரயங்களும் ஏற்படக்கூடும். | கொள்வனவு செய்யப்பட்ட காணிகளிற்கான செலுத்தவேண்டிய வட்டி கொடுப்பனவு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய முன்னர் முழுமையாக செலுத்தப்படல் வேண்டும். இருப்பினும், பிரிவு 44 இன் கீழான பதிவு மாத்தறை - கொடகம வீதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. | காணிகள் சுவீகரிப்பின் மீதான கவனம் அவசரமாக தேவைப்படுகிறது. |

### 3.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| கடன் வழங்கும் முகவரினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் 7.20 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 6.12 மில்லியனிற்கு சமமான ரூபா 923 மில்லியன் சிவில் நிர்மான வேலைகளில் காணப்பட்ட மந்தகதியான செயலாற்றல் காரணமாக செயற்திட்ட முடிவு காலப்பகுதியில் பயன்படுத்தமுடியாமல் காணப்பட்டதுடன் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் 2017 செப்தம்பர் 11 இல் கடன் வழங்கும் முகவரிற்கு திருப்பிச் செலுத்தப்பட்டது. | செயற்திட்டத்தின் உரிய நோக்கத்தை அடய முடியாமல் போகக்கூடும். | அனைத்து நிர்மான வேலைகளும் பட்டியலிடப்பட்ட படி செய்யப்பட்டிருந்ததுடன் இப் பெறுமதி ஒரு சேமிப்பாக இருந்தது. | செயற்திட்ட காலப்பகுதிக்கு நிர்மான வேலைகளை பூரத்திசெய்ய அலைகளை முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |